புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • பிப்ரவரி 15, 2024 • புரட்சி 24 • முழக்கம் 05 • விலை ரூ.3.00

## நாடாளுமன்றத் தேர்தலில் சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்

## எழுச்சியோடு தொடங்கியது கழகத்தின் பரப்புரை



பிப்ரவரி 2-ஆம் தேதி சேலத்தில் நடைபெற்ற கழகத் தலைமைக் குழுவில், “சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்! சமூக ஒற்றுமையைக் காப்போம்!” என்ற முழக்கத்தோடு நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை நடத்த முடிவு செய்யப்பட்டது. அதன்படி பல்வேறு மாவட்டங்களிலும் கழகத்தின் பரப்புரைக் கூட்டங்கள் பொதுமக்களின் வரவேற்போடு எழுச்சியோடு தொடங்கி நடைபெற்று வருகின்றன.

**சென்னை:** சென்னை மாவட்டத்தின் முதல் பரப்புரைக் கூட்டம் 10.02.2024 அன்று வேளச்சேரி காந்தி சாலையில் பொதுக்கூட்டமாக நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் எட்வின் பிரபாகரன் தலைமை தாங்கினார். இரண்யா வரவேற்புரையாற்றினார். பாடகர் கோவன் பங்கேற்ற ம.க.இ.க கலைக்குழுவின் கலை நிகழ்ச்சிகளுடன் பொதுக்கூட்டம் தொடங்கியது. கழகத் தோழர் பேரன்பு ராப் பாடல்கள் பாடினார். விடுதலைச் சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச்செயலாளர் வன்னிஅரசு, திராவிட இயக்கத் தமிழர் பேரவை துணைப் பொதுச்செயலாளர் இரா.உமா, கழகத் தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் ஆகியோர் 10 ஆண்டுகால பாஜக ஆட்சியின் பேராபத்துக்களை மக்களிடம் விளக்கிப் பேசினர்.

திராவிட முன்னேற்றக் கழக கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாவட்ட துணை அமைப்பாளர் தடா ஓ.சுந்தரம் உரை அனைவரும் ரசித்துக் கேட்கும் விதமாக அமைந்தது. பிரீத்தி நன்றி கூற பொதுக்கூட்டம் நிறைவடைந்தது. பொதுக்கூட்டத்தின் நிறைவில் மயிலைப் பகுதிக் கழக சார்பில் அஸ்வின் - கார்த்திக் ஆகியோர் பெரியார் முழக்க சந்தா தொகை ரூ.4500-யை கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரனிடமும், கே.கே.நகர் துரைராசு பெரியார் முழக்க சந்தா தொகை ரூ.7500-யை கழகத் தலைமைக்குழு உறுப்பினர் அன்பு தனசேகரிடமும் வழங்கினார்கள்.

**சேலம்** : 11.02.2024 அன்று நங்கவள்ளியில் பேருந்து நிலையம் பகுதியில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு அ.செ. சந்திரசேகரன் தலைமை தாங்கினார். நங்கவள்ளி ஒன்றியப் பொறுப்பாளர் பொ.கிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார். தருமபுரி மாவட்டச் செயலாளர் சந்தோஷ்குமாரின் அரசியல் நையாண்டி நிகழ்ச்சியுடன் பொதுக்கூட்டம் தொடங்கியது. தொடர்ந்து காவை இளவரசன் அவர்களின் மந்திரமா? தந்திரமா! பகுத்தறிவு நிகழ்ச்சி நடைபெற்றது. மேட்டூர் டி.கே.ஆர் இசைக் குழுவின் கலை நிகழ்ச்சிகளுக்கு பின்னர் கருத்துரைகள் தொடங்கியது.

கழகப் பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன், திமுக மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் வீரமணி ஜெயக்குமார், தலைமைக் கழகப் பேச்சாளர் கோனூர் வைரமணி, சேலம் மாவட்ட அமைப்பாளர் ஏற்காடு பெருமாள் ஆகியோர் பரப்புரைக் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி சிறப்புரையாற்றினார்கள். சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராசு, நங்கவள்ளி ஒன்றியப் பொறுப்பாளர் ராஜேந்திரன், கொளத்தூர் ஒன்றியப் பொறுப்பாளர் விஜயகுமார், சேலம் (கி) மாவட்ட இளைஞரணி தலைவர் தங்கதுரை ஆகியோர் முன்னிலை வகித்தினர்.நிறைவாக நங்கவள்ளி நகர செயலாளர் சு.பிரபாகரன் அவர்கள் நன்றி கூறினார்.



**திண்டுக்கல்** : பழனியில் 10.02.2024 அன்று தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து பரப்புரைக் கூட்டம் தொடங்கப்பட்டது. ரவுண்டானாவில் திமுக மாநில மாணவரணித் துணைச் செயலாளர் வீரமணி ஜெயகுமார், பழனி நகரச் செயலாளர் வேலுமணி பழனி ஒன்றியச் செயலாளர் செளந்தர பாண்டியன் ஆகியோர்

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## கருத்துரிமைக்கு எதிரான சுற்றறிக்கை - கழகத் தலைவர் கண்டனம்

**கருத்துரிமை - பேச்சுரிமைக்கு எதிரான சுற்றறிக்கையை பெரியார் பல்கலைக்கழகம் திரும்பப் பெற வேண்டும் என்று கழகம் வலியுறுத்தல்!**

**இதுகுறித்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி விடுத்துள்ள அறிக்கை பின்வருமாறு:-**

பெரியார் பல்கலைக்கழகம் மீண்டும் ஒரு சர்ச்சைக்குரிய சுற்றறிக்கையை கடந்த 5.2.2024 ஆம் நாளன்று அனைத்து பணியாளர்களுக்கும் விடுத்துள்ளது.

பெரியார் பல்கலைக்கழகத்தின் பணியாளர்கள் நடத்தை விதிகளின் 14 (1) (2) என்ற விதிகளைக் காட்டி, இதுவரை பல்கலைக்கழகத்தில் பணியாற்றுவோர் முன்னனுமதி பெற்றோ, பெறாமலோ நூல்கள் வெளியிட்டிருந்தால் அச்சிட்ட நூல்களின் எண்ணிக்கை, தலைப்பு, பதிப்பாளர் முகவரி, பெற்ற பணப் பலன்கள் என்றெல்லாம் பல விவரங்களை அந்த சுற்றறிக்கை கோருகிறது.

ஆனால் பல்கலைக்கழகப் பதிவாளர் சுற்றறிக்கையில் சுட்டிக் காட்டி இருக்கும் விதிகள் தொலைக்காட்சி வானொலி விவாதங்களில் பங்கேற்பது குறித்தும், செய்தி ஏடுகளுக்கு, வார ஏடுகள் போன்ற பருவ வெளியீடுகளுக்கு எழுதுவது குறித்தும் உள்ள விதிகளைத்தான் அவர்கள் காட்டியிருக்கிறார்கள். அந்த விதிகளின்படி கூட இலக்கியம், கலை, அறிவியல், கல்வியியல் பண்பாட்டியல் போன்ற தலைப்புகளில் அந்த ஒளிபரப்பு அல்லது செய்தி ஏடுகளுக்கு எழுதுகிற கட்டுரைகள் இருக்குமாயின் அதற்கு முன் அனுமதி தேவையில்லை என்றும் உட்பிரிவு (2) கூறுகிறது.

ஆனால், ஏற்கனவே பெரியார் பல்கலைக்கழகத்தின் இதழியல் துறை இணைப்பேராசிரியரும் பெரியார் அண்ணா கலைஞர் ஆய்வு மையத்தின் இயக்குனர் பொறுப்பாகவும் விளங்கிக் கொண்டிருக்கிற முனைவர் இரா. சுப்பிரமணி அவர்கள் எழுதியிருந்த பெரியாரின் போர்க்களங்கள், மெக்காலே - பழமைவாத கல்வியின் பகைவன் என்ற நூல்கள் குறித்து விளக்கங்கள் கேட்கப்பட்டு அதற்கான விளக்கங்களும் பெறப்பட்டு நிலுவையில் இருக்கிற



இந்த சூழலில் மீண்டும் அவரை குறி வைத்து இதை சுற்றறிக்கை அனுப்பப்பட்டு இருப்பதாக நாம் கருதுகிறோம்.

பெரியார் பல்கலைக்கழகத்தில் பதிப்புத் துறை என்று ஒன்று கடந்த 20 ஆண்டுகளாக இயங்கி வந்திருந்தும் அதன் வழியாக இதுவரை பெரியார் குறித்த 60 பக்க நூல் ஒன்று வெளியிட்டதைத் தவிர வேறு எதையும் செய்ததில்லை.

ஆனால் பெரியார் பல்கலைக்கழகத்தின் பெரியார் ஆய்வு மையத்தின் தலைவர் இதழியல் துறையின் பார்வையிலான பெரியார் குறித்த ஒரு நூலை எழுதுவதும், நவீன கல்விக்கு முன்னோடியாக கருதப்படுகிற மெக்காலே குறித்து அதாவது கல்வியியல் குறித்து எழுதியதும் தவறானது என்பதைப் போல ஏற்கனவே விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது.

ஆனால் சுட்டிக் காட்டப்படும் பல்கலைக்கழக விதிகள், வானொலி தொலைக்காட்சி விவாதங்கள், செய்தி வார ஏடுகளில் எழுவது குறித்து உள்ள விதிகளைச் சுட்டிக்காட்டி துறை சார்ந்த நூல்கள் கல்வியியல் சார்ந்த, பண்பாட்டு புரட்சி சார்ந்த விதிவிலக்கு அளித்திருக்கும் துறைகளில் எழுதுவதற்கும் விளக்கம் கேட்பதும், அவர் மீதான நடவடிக்கை எடுக்கத் துடிப்பதும் பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தரும் பதிவாளரும் கொண்டிருக்கிற மதவாத சிந்தனை போக்குக்கு எதிரானவை என்ற கருத்தில் இருப்பதால்தான் என்றுதான் யூகிக்க முடிகிறது. பெரியார் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரும் பதிவாளரும் கொண்டிருக்கிற இந்துத்துவ மதவாத சிந்தனை போக்குக்கு எதிரான கருத்துகள் கொண்டவற்றை எழுதுவதை குற்றமாக்கத் துடிக்கும் கருத்துரிமைக்கு எதிரான பாசிச போக்குதான் வெளிப்படுகிறது.

மேலும் புத்தூடகங்கள் பல்வேறு பரிமாணங்களை எட்டி செல்லிடப்பேசி வழியாகவும்,செயலிகள் வழியாகவும், சமூக ஊடகங்கள் வழியாகவும் கற்றல்- கற்பித்தல் நிகழ்ந்து வரும் நிலையில் சமூக ஊடகங்களில் பங்கேற்க அனுமதி பெற வேண்டும் என்பது என்ன வகையான சிந்தனை வளர்ச்சி எனத் தெரியவில்லை. பல்கலைக்கழகங்கள் என்பவை சுதந்திரமான சிந்தனைகளையும், பன்முகத் திறன்களை மாணவர்களிடையேயும், பொது தளத்திலும் உருவாக்கும் அறிவின் மையமாகும். அங்கு எழுதுவதற்கும், பேசுவதற்கும் அனுமதி பெற வேண்டும் என விதிகள் இருப்பதாகக் கூறுவது கருத்துரிமை பேச்சுரிமைக்கு எதிரான பாசிச நடவடிக்கையாகவே கருத வேண்டி உள்ளது.

எழுதுவதும், உரையாடுவதும் தான் ஆசிரியப் பணிக்கான அடிப்படை கடமைகளாகும். அதனைத் தடுக்க முனைவது ஆபத்தான போக்காகும்.

எனவே, பெரியார் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் பொறுப்பு கடந்த 5.2.2024 அன்று வெளியிட்டிருக்கிற அந்த சுற்றறிக்கையை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம்.

***- கொளத்தூர் மணி,***
***தலைவர்,***
***திராவிடர் விடுதலைக் கழகம்.***
***08.02.2024.***

## தலையங்கம்

# சோதனைக்கூட எலிகளா மக்கள்?

அயோத்தியில் ராமர் கோயிலை கட்டிவிட்டோம், காஷ்மீருக்கான சிறப்பு உரிமையை பறித்து விட்டோம் என்ற மிதப்போடு பொது சிவில் சட்டத்தை திணிக்க துணிந்திருக்கிறது பாரதிய ஜனதா கட்சி. அதற்கு முன்னோட்டமாகத்தான் உத்தரகாண்ட் மாநிலத்தில் பொது சிவில் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். இதன்படி உத்தரகாண்ட் மாநிலத்தில் வசிக்கும் அனைத்து மதத்தினருக்கும் திருமணம், விவகாரத்து சார்ந்த நடைமுறைகளில் இனி ஒரே சட்டம்தான் இருக்கப் போகிறது. அந்தந்த மத வழக்கப்படி திருமணம் செய்யலாம், ஆனால் யார் யாரைத் திருமணம் செய்ய வேண்டுமென்பதற்கு பொது சிவில் சட்டம் பல நிபந்தனைகள், கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறது. திருமணம் செய்யாமல் இணைந்து வாழ்வதற்கும், விவாகரத்து செய்வதற்கும்கூட பொது சிவில் சட்டத்தில் விதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

இசுலாமியர்களின் திருமண விவகாரங்களில் மூக்கை நுழைப்பதாக நினைத்து பாஜக அரசு உருவாக்கிய இந்த சட்டத்தால் இந்துக்கள் மத்தியிலும் கடும் அதிருப்தி கிளம்பியிருக்கிறது. யார் யாரை திருமணம் செய்ய வேண்டுமென்று பாஜக அரசு முடிவு செய்யக்கூடாது, இந்த சட்டத்தின் கூறுகள் பெரும்பாலும் பெண்களுக்கு எதிராகவே இருக்கிறது என பெண்கள் அமைப்புகளிடம் இருந்து கண்டனக் குரல்கள் எழுந்திருக்கின்றன. பாஜகவைச் சேர்ந்த இளைஞர்களே இச்சட்டத்தின் கூறுகள் ஏற்கும்படியாக இல்லை எனக்கூறுவதாக தி ஸ்கிரால் ஊடகம் செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஒரே நாடு ஒரே வரி என ஜிஎஸ்டி அமல்படுத்தப்பட்டபோது பெட்ரோல், டீசலுக்கு மட்டும் விலக்களித்தது போல, இந்த பொது சிவில் சட்டத்தில் இருந்து பழங்குடியினருக்கு மட்டும் விலக்கு அளித்திருக்கிறார்கள். பழங்குடி மக்களின் வாழ்க்கை, திருமண முறைகள் மற்ற சமூகத்தினரிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவை. அதனால் அவர்களின் வாழ்வியல் முறைக்குள் குழப்பத்தை ஏற்படுத்தும் சட்டங்களை உருவாக்கினால் வீணாக எதிர்ப்புகளை சந்திக்க நேரிடும் என்ற அச்சத்தில், தற்போதைக்கு அவர்களுக்கு மட்டும் விலக்கு அளித்திருக்கிறார்கள். ‘ஒரே குடும்பத்தில் இருவருக்கு வெவ்வேறு விதிகள் இருக்க முடியாது. இப்படி இரட்டை அமைப்புடன் வீடு எப்படி இயங்க முடியும்?’ என்று பொதுசிவில் சட்டத்திற்கு நியாயம் கூறினாரே பிரதமர் மோடி, அப்படியானால் அந்த குடும்பத்தினர் இல்லையா என்ற கேள்விகளும் எழுந்திருக்கின்றன.

பாஜகவைப் பொறுத்தவரை பொதுசிவில் சட்டம் என்பது நெடுநாள் கனவு. 1967 தேர்தலில் ஜனசங்கம் கொடுத்த வாக்குறுதிகளில் பொது சிவில் சட்டமும் ஒன்று. அதன்பிறகு பாரதிய ஜனதா கட்சியாக மருவிய பிறகும் தொடர்ச்சியாக கொடுக்கப்படும் வாக்குறுதியாக இது இருக்கிறது. ஆனாலும் பாஜக ஆட்சிக்காலங்களில் பொது சிவில் சட்டத்தை நடைமுறைப்படுத்த எம்முயற்சியும் எடுக்கப்படவில்லை.

இப்போது பரிசோதனையாக உத்தரகாண்டில் நடைமுறைப்படுத்துவதற்குப் பின்னால் பல காரணங்கள் இருக்கின்றன.

உத்தரகாண்ட் மாநிலம் ஒப்பீட்டளவில் மிகச் சிறிய மாநிலம். இந்துக்களின் எண்ணிக்கை அதிகம். இசுலாமியர்கள் 13 விழுக்காடு மட்டுமே இருக்கின்றனர். எனவே எதிர்ப்புகளை எளிமையாகக் கையாளலாம். இந்து- இசுலாமியர்கள் இடையிலான பிளவை அதிகரித்து, இந்துக்களை பாஜகவின் பின்னால் அணிதிரட்டலாம், இந்த முயற்சி வெற்றி பெற்றால் பாஜக ஆளும் மற்ற மாநிலங்களிலும் நடைமுறைப்படுத்த துணியலாம், பிறகு நாடு முழுவதும் அமல்படுத்தலாம் என்பது பாஜகவின் கணிப்பு.

ஏனெனில் அயோத்தி ராமர் கோயில், காஷ்மீருக்கான சிறப்புரிமையை பறித்தது, குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை அமல்படுத்த துணிவது என பாஜகவின் ஒவ்வொரு அசைவுமே இந்துக்கள் அல்லாதவர்களை நீக்கம் செய்வது என்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறது. இந்துக்கள் அல்லாதவர்கள் இந்தியாவில் வாழ உரிமையில்லை என்று அரசியலமைப்புச் சட்டம் சொல்லவில்லை. யார் இந்துக்கள் என்பதையே இந்து அல்லாத கிறித்தவர்தான் வரையறை செய்தார். அந்த இந்து அடையாளத்தை மூலதனமாக்கி, இந்து- இந்தி- இந்தியா என கட்டமைக்கத் துடிக்கிறது பாஜக.

2 மதங்களுக்கு இடையில் பொதுச் சட்டம் வேண்டுமென்று கேட்கும் பாஜக இரண்டு ஜாதிகளுக்கு இடையிலும் பொதுச் சட்டம் வேண்டுமென்று கேட்க துணியுமா? ஒவ்வொரு ஜாதியும் இனி தனித்தனி நடைமுறையின்படி திருமணம் செய்யக்கூடாது! எல்லா ஜாதிகளும் ஒரே நடைமுறையின்படிதான் திருமணம் செய்ய வேண்டுமென்று பேச பாஜகவிற்கு துணிச்சல் இருக்கிறதா? தாழ்த்தப்பட்ட ஜாதியைச் சேர்ந்த ஒரு இந்து, உயர் ஜாதி இந்துவை திருமணம் செய்ய சமூக ரீதியான தடைகளை ஏற்படுத்தக்கூடாது என்று பொது சிவில் சட்டம் கொண்டு வர துணிச்சல் இருக்கிறதா? ஆணவக் கொலைகளை தடுக்க பொது சிவில் சட்டத்தில் இடம் இருக்கிறதா? அனைத்து ஜாதி இந்துக்களும் அர்ச்சகராவதற்கு பொது சிவில் சட்டத்தில் வழி இருக்கிறதா? இதெல்லாம் இல்லாத ஒரு சட்டம் எப்படி பொது சிவில் சட்டமாகும்?

எனவே பொது சிவில் சட்டம் என்ற பெயரில் மதச் சிறுபான்மையினரை நசுக்க ஒரு முயற்சியை இதன்மூலம் பாஜக செய்கிறது. அதற்காக ஆட்சியதிகாரத்தில் அமரவைத்த உத்தரகாண்ட் மக்களை, சோதனைக் கூட எலிகள் போல பயன்படுத்த துணிந்துவிட்டது பாஜக!

# ஆளுநரின் ‘மனசாட்சி’ உரை இப்படி...

**ஆளுநர் உரை** : மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களே, உறுப்பினர்களே, அவைத் தலைவரே உங்கள் அனைவருக்கும் குடியரசு தலைவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளுநரின் நமஷ்காரம். ஜெய் சிரி ராம் என்று நான் இப்போது கூறுவேன். அதை நீங்கள் திருப்பி முழங்க வேண்டும் (அவையில் நான்கு பேர் மட்டுமே திருப்பி முழங்குகிறார்கள்) சரி அனைவரும் இதை முழங்காவிட்டாலும், நான் அனைவரும் முழங்கியதாக பேரவைக் குறிப்பில் பதிவு செய்ய உத்தரவிடுகிறேன்.

தமிழ்நாட்டில் இப்போது மாநில உரிமை என்ற கூச்சல் காதை துளைக்கிறது. இப்போதைய தேவை மாநில உரிமை அல்ல, ஆளுநர்களின் உரிமை. அதுவும் எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களில் உள்ள ஆளுநர்களுக்கான உரிமை. இதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதுதான் சனாதன தர்மம். இந்த சனாதன தர்மம் இல்லாவிட்டால் ஜனநாயகமே இல்லை என்று நமது முன்னோர்களும், ரிஷிகளும், தேவர்களும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே அடித்து கூறிவிட்டார்கள்.

சூத்திரர்கள், பஞ்சமர்கள் அன்னிய மதத்தினர் ஓட்டு போட்டதாலேயே மக்கள் பிரதிநிதியாகிவிட முடியாது. தேவர்கள், ரிஷிகள், முனிவர்கள் வழிவந்த எங்கள் ஆணைக்கு நீங்கள் அடிபணிந்தாக வேண்டும். இதுதான் சனாதன வாழ்க்கை. நீங்கள் போடுகிற சட்டங்களுக்கு நாங்கள் ஒப்புதல் தர முடியாது. எங்களது மாளிகையிலேயே பல சட்டங்களை உருவாக்கி உங்களுக்கு எங்களது ஆட்கள் மூலம் அனுப்பிவிடுவோம். அதற்கு நீங்கள் ஒப்புதல் தந்தாக வேண்டும். அதுதான் சனாதன ஜனநாயகம்.

நமது மன்னர்கள் மக்களிடம் வரி வாங்கினார்கள். அதை மக்களுக்கு செலவிட்டார்கள் என்பதற்கு வரலாற்றில் நீங்கள் எந்த ஆதாரத்தையாவது காட்ட முடியுமா? நீங்கள் இப்போது செலுத்திய வரிகளுக்கு பங்கு கேட்பது நமது முன்னோர்களும், தேவர்களும் அவர்கள் வழிவந்த அரசர்களும் போற்றி பாதுகாத்துவந்த கலாச்சாரத்தையே சீர்குலைப்பதாகும்.

தொழில் முதலீட்டுக்கு ஏன் வெளிநாடு போக வேண்டும்? நமக்கான தொழில்கள் நமது பாரத தேசத்தில் இருக்கிறது. முடி வெட்டுவது, மலம் எடுப்பது, சவரம் செய்வது, மண்பானை செய்வது போன்ற நமது பாரம்பரிய தொழில்களை வளர்ப்பதற்கு நமது பிரதமர் விஷ்வகர்மா என்ற திட்டத்தை வகுத்துள்ளார். அதையெல்லாம் ஓரங்கட்டிவிட்டு அன்னிய முதலீட்டை கொண்டுவருவது பாரத துரோகம் என்று நான் பதிவு செய்கிறேன்.

இது என்ன தமிழ்நாடு? இப்படி ஒரு தீர்மானத்தை இந்த அவையில் நிறைவேற்ற உங்களுக்கு யார் உரிமை தந்தது? பாரதத் தமிழர்கள், பாரதத் தமிழகம் அல்லது தமிழகம் என்றே பெயர் சூட்டியிருக்க வேண்டும். தமிழ்நாடு என்ற சொல் இன்றுமுதல் முற்றாக ஒழிக்கப்படுகிறது. அரசு சின்னத்தில் உள்ள வாய்மையே வெல்லும் என்ற சொல்லும் நீக்கப்பட்டு ஜெய் சிரி ராம் என்று மாற்றியமைக்கப்படுகிறது.

நமது மகாபாரதத்திலேயே சூது விளையாடி இருக்கும் போது ஆன்லைன் சூதாட்டத்தை தடை செய்து சட்டப்பேரவை நமது கலாச்சாரத்தையே அவமதித்துள்ளது. அதனால் தான் அதற்கு நான் ஒப்புதல் தர மறுத்தேன். நான் ஒரு கலாச்சார பாதுகாவலன்.

நான் ‘ரா’ உளவு நிறுவனத்தில் பணியாற்றியவன். நாகாலாந்து ஆளுநராக இருந்து அங்கு விடுதலை கேட்ட தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களால் விரட்டியடிக்கப்பட்டு தமிழகம் திரும்பி வந்தேன். ஆனாலும் எனது தேசபக்தி குறைந்துவிடவில்லை. எனது உடல் முழுவதும் அந்த ரத்தம் ஓடிக்கொண்டுள்ளது. தேசிய கீதத்தை நான் திரும்ப திரும்ப பாடுவேன். சாப்பிடுவதற்கு முன் பாடுவேன். தூங்குவதற்கு முன் பாடுவேன், பூஜைக்கு முன் பாடுவேன், குறட்டை வராவிட்டால் பாடுவேன். இப்படி பாடிக்கொண்டே இருந்தால் தான் தேசபக்தி நம்மிடம் ஊறிக்கொண்டே இருக்கும். அதனால் தான் சட்டமன்றத்தில் உரை தொடங்கும் முன்பு கூட தேசியகீதம் பாட வேண்டும் என்று நான் திரும்ப திரும்ப கூறினேன். ஆனால் அடம் பிடிக்கிறது இந்த சட்டசபை. இது மிகப்பெரிய அவமதிப்பு அல்லவா

காந்தி தான் நமக்கு சுதந்திரம் வாங்கித்தந்தாரா? அவரது போராட்டம் பிசுபிசித்துவிட்டது. நமக்கு எப்போது சுதந்திரம் கிடைத்தது. அயோத்தியில் ராமர் கோயில் திறக்கப்பட்ட அந்த நாளில் தான் நமக்கு சுதந்திரம் கிடைத்தது. நமது பாரத பிரதமரே ராமன் கோயில் திறந்த நாளில் தான் நமக்கு அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை கிடைத்துள்ளது என்று கூறியதற்கு பிறகு காந்தி சுதந்திரம் வாங்கிக் கொடுத்தார் என்று உளறுவதா?

ராமராஜ்ஜியம் தான் நமக்கான பண்பாடு. விபீஷணர்கள், அனுமார்கள் என்று அன்று ராமனுக்கு ஆதரவாக பெரும்படை இருந்தது. இப்போது சிபிஅய், அமலாக்கத்துறை, நாடாளுமன்றம் அவ்வப்போது நீதிமன்றங்கள் அனைத்துமே நமது தர்மத்தை காப்பாற்ற களமிறக்கப்பட்டுள்ளன.

மதமாற்றம் செய்வது சனாதனத்திற்கு, தேச பக்திக்கு எதிரானது. ஆனால் எதிர்க்கட்சிகளின் எம்.எல்.ஏ-க்களை கட்சி மாற்றம் செய்ய விலை பேசுவது சனாதனம். அதற்கு மற்றொரு பெயரும் இருக்கிறது, அதுதான் தேசபக்தி. இது தொடர்பாக நான் சில அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன்.

- **நான் நியமித்த துணைவேந்தர்கள் ஊழல் குற்றச்சாட்டுகளில் இருந்து விலக்கு அளிக்கப்படுவார்கள்.**
- **எனது மாளிகைக்கு வெளியில் பெட்ரோலை பாட்டிலில் வைத்து நெருப்பு வைத்த பயங்கரவாதி மீது சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்படும்.**
- **ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் மோடி ஆட்சிக்கு ஆதரவாக நடக்க வேண்டும். சட்டப்படி நடப்பேன் என்று அடம்பிடித்தால் கடும் தண்டனை.**
- **எனக்காக தொலைக்காட்சிகளில் வாதாடும் பரப்புரையாளர்களிடம் நெறியாளர்கள் குறுக்குக் கேள்விகளை கேட்கக் கூடாது. அப்படி கேட்டால் தொலைக்காட்சி உரிமங்களை ரத்து செய்ய நேரிடும் என்று அந்த முதலாளிகளை எச்சரிக்கை செய்கிறேன்.**
- **இதுகுறித்து விரிவாக ஆராய அரசியல் சட்ட நிபுணர்கள் குழு ஒன்றை அமைத்திருக்கிறேன். அந்த குழுவுக்கு ஓய்வுபெற்ற நீதிபதி ஜே.ஆர்.கோமிநாதன் தலைமை தாங்கி அறிக்கைத் தருவார்.**

என்னுடைய இந்த உரையை பற்றி இந்த அவையில் விவாதங்கள் ஏதும் நடத்துவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது. எனவே விவாதங்கள் நடத்தாமலேயே ஒப்புதல் தர வேண்டும் என்று உத்தரவிட்டு எனது மனசாட்சியை திருப்தி படுத்த வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். **ஜெய் சிரி ராம்!**

யாரப்பா அங்கே, மீண்டும் அந்த தேசிய கீதத்தை போடு!

கோடங்குடி மாரிமுத்து

# இழிவு நீங்கவே திராவிட அடையாளம் (5)

***(08.02.2024 இதழில் வெளியான உரையின் தொடர்ச்சி)***

*1892-இல் ஆங்கிலக் கல்வி வந்தபோது சென்னை மாகாணத்தில் சர்வீஸ் கமிசன் முதன்முதலில் தொடங்கப்பட்டது. இந்த 1892-க்கும் 1904-க்கும் இடையில் அய்.சி.எஸ். அதிகாரிகளாக 16 இந்தியர்கள் நியமனம் செய்யப்பட்டனர். அதில் 15 பேர் பிராமணர்கள். அந்த காலகட்டத்தில் ஆளுநர் நிர்வாக கவுன்சிலில் 3 இந்தியர்கள், அதில் இருவர் பிராமணர்கள். 1900-ஆம் ஆண்டு ஐந்து பேர் நீதிபதிகளாக நியமனம் செய்யப்பட்டனர். அதில் நால்வர் பிராமணர்கள். 1907-இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் செனட் உறுப்பினர்களாக 12 நியமிக்கப்பட்டனர். அதில் 11 பேர் பிராமணர்கள். அவர்கள் பின்னாளில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி இருக்கக்கூடாது என்று கூறி அதை எடுத்துவிட்டனர். அதற்குப் பின்னர் ஆட்சியமைத்த பனகல் அரசர் தலைமையிலான நீதிக்கட்சி காலத்தில்தான் தமிழ் மீண்டும் கொண்டுவரப்பட்டது.*

திராவிடம் என்ற சொல் 7ஆம் நூற்றாண்டில் குமரில பட்டர் எழுதிய தாந்திர வார்த்திகா என்பதில் ஆந்திரா திராவிட பாஷை என்று வருகிறது. இந்த மண்ணில் கிறித்துவத்தை பரப்புவதற்காக இராபர்ட் கால்டுவெல் வந்தார். அவர் 18 மொழிகளை கற்றறிந்தவர். தென்னிந்தியாவில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் பேசப்படுகிறது. இதில் ஒரு இலக்கண ஒற்றுமை இருக்கிறது. வட இந்தியாவில் இருப்பது எல்லாம் இந்தோ ஆரியன் மொழிகள். இவைகளெல்லாம் சமஸ்கிருதத்தில் இருந்து தோன்றியது. தென்னிந்தியாவில் இருக்கும் மொழிக்கும், வட இந்தியாவில் இருக்கும் மொழிக்கும் தொடர்பே இல்லை என்பதை கண்டறிந்தார் கால்டுவெல். *The Comparitive Grammer Of The Dravidian Or South Indian Family Of Languages* (திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்) என்று ஒரு புத்தகத்தை எழுதினார்.

எல்லீஸ் சென்னை மாவட்ட ஆட்சியராக பணியாற்றியவர். அவர் தென்னிந்தியாவில் இருக்கக்கூடிய மொழிகள் எல்லாம் ஒரு குடும்பம் என்று அவர் கூறியுள்ளார். அவர் முழுமையாக ஆய்வு செய்து மொழிகளை எல்லாம் ஒப்பிட்டு "தமிழ்மொழி உள்ளிட்ட மொழிகள் சமஸ்கிருதத்தில் இருந்து பிறக்கவில்லை" என்பதை தெளிவுபடுத்தினார். பின்னர் "இருக்கிற மொழிகளிலேயே வளம்வாய்ந்த மொழி என்றால் அது தமிழ்தான். இந்த தமிழ் என்பது சமஸ்கிருதத்திற்கு வார்த்தைகளை கடன் கொடுத்துள்ளது. இம்மொழி தனித்து இயங்கவல்லது" என்றார்.

மேலும், "இவர்களெல்லாம் தமிழை திராவிடம் என்றும், தமிழ் என்றும் சொல்கிறார்கள். பெரிய அறிவாளிப் பார்ப்பனர்கள் திராவிடம் என்று சொல்கிறார்கள். சாதாரண எளிய மக்கள் தமிழை தமிழ் என்று சொல்கிறார்கள். பின்னர் அவர், ஒரு மொழிக்கு எதற்கு இரண்டு சொற்கள், தமிழை தமிழ் என்று சொல்லுவோம். அந்த தமிழை சொல்லத்தெரியாமல் சொல்லும் சமஸ்கிருதப் பார்ப்பனர்கள் தமிழ, தமிழம், திரவிடம், திராவிடமாக மாறி தமிழ் என்பது தான் திராவிடமாக மாறியது. தமிழ் வேறு திராவிடம் வேறு கிடையாது. திராவிட மொழிக்குடும்பத்தில் மொத்தம் 23 மொழிகள் உள்ளது. இந்த மொழிக்குடும்பத்தை குறிக்க திராவிடம் என்ற சொல்லைப் பயன்படுத்திக்கொள்கிறேன். இதைவிட வேறு நல்ல வார்த்தை எனக்கு கிடைக்கவில்லை. அதனால் இந்த வார்த்தையை நான் பயன்படுத்திக்கொள்கிறேன்" என்றார்.

ஆனால் இது சரியானது தானா என்று அவருக்கு தெரியவில்லை. இருந்தாலும் இந்த சொல்லை கலைச் சொல்லாகப்

**பேராசிரியர் ஜெயராமன்**



பயன்படுத்தினார். மேலும் அந்த புத்தகத்தில் "இவர்களெல்லாம் திராவிட மொழிகளை பேசுகிறவர்கள், திராவிடர்கள் என்று குறிப்பிடுகிறார். இவர்கள் இந்த மண்ணின் மக்கள், ஆரிய பார்ப்பனர்கள் வந்தேறிகள் என்று சொன்ன அவர், இந்த மண்ணின் மக்களை சூத்திரர்கள் என்று எழுதி இருக்கிறார்கள் என்பதை விளக்கினார். கால்டுவெல் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தில், பறையர்கள் என்பவர்களும் திராவிடர்கள்தான் என்று எழுதியுள்ளார். அப்போது வரைக்கும் கூனிக்குருகி இருந்த சூத்திரர்கள் அதற்குப் பிறகு தமிழர்களாக தலைநிமிர்ந்தனர்.

*1881-இல் மக்கள்தொகை கணக்கெடுப்பு*

> **தமிழ்நாடு பார்ப்பனியம் ஒழிந்த நாடு. ஒருவர் தமிழனாகவும், இந்தியனாகவும் இருக்கும்போது ஏன் தமிழனாகவும் திராவிடனாகவும் இருக்க முடியாது?**

*நடத்தப்பட்டது. அப்போது அயோத்திதாச பண்டிதர் எங்களை "ஜாதியில்லாத திராவிடர்கள்" என்று பதிவு செய்யுங்கள் என்றார். இந்த திராவிடம் என்ற சொல் மக்கள் விரும்பி ஏற்ற சொல், அது மக்கள் போராட்ட சொல். 1885-இல் ஜான்ரத்தினம் மற்றும் அயோத்திதாச பண்டிதர் இணைந்து "திராவிடர் கழகம்" என்ற ஒரு அமைப்பைத் தொடங்கினார்கள். அதேபோல 1891-இல் "திராவிட மகாஜன சபா" என்ற அமைப்பு தொடங்கப்பட்டது. அந்த சொல்லை பயன்படுத்தியவர்கள் ஒடுக்கப்பட்ட மக்கள்தான். 1916-இல் டி.எம்.நாயர் - நடேசனார் - தியாகராயர் இணைந்து உருவாக்கிய அமைப்பு கூட பார்ப்பனரல்லாத இயக்கம்தான். அதன்*

பிறகு அவர்கள் தொடங்கிய பத்திரிகைக்கு 'திராவிடன்' என்று பெயர் சூட்டினார்கள். திராவிடம் என்ற சொல் அயோத்திதாசரால் பயன்படுத்தப்பட்டு, தற்போது திராவிட இயக்கத்தின் கைகளுக்கு வந்துள்ளது.

*1919-இல் மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டம் வருகிறது. அந்த சட்டம், மக்களே தேர்தல் நடத்தி நீங்களெல்லாம் அதில் அமைச்சர்களாக பொறுப்பேற்று உங்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தில் சில சட்டங்களை போடலாம் என்றது. அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த நீதிக்கட்சி பல சட்டங்களை கொண்டுவந்தது. இட ஒதுக்கீடு முறையை கொண்டுவந்தனர். பேருந்துகளில் பஞ்சமர்களுக்கு அனுமதியில்லை என்று இருந்ததை ஒழித்துக்கட்டியது நீதிக்கட்சி. ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சார்ந்த குழந்தைகளுக்கு அரசாங்கமே கல்விக் கட்டணம் செலுத்தியது. பள்ளிக்கூடங்களில் ஆதிதிராவிடர் பிள்ளைகளை சேர்க்கவில்லை என்றால் உங்களுக்கு மானியம் வழங்கப்படாது என்று அறிவித்தது அன்றைய நீதிக்கட்சி அரசு.*

திராவிடம் என்பதை நான் ஒரு குறியீட்டுச் சொல்லாகத்தான் பயன்படுத்துகிறேன் என்று பெரியார் சொல்வார். 1945ஆம் ஆண்டு ஈரோடு மகாஜன பள்ளியில் பெரியார் உரையாற்றும் போது, "அனைவரும் தங்களை திராவிடர் என்று உணருங்கள். இந்த இழிவெல்லாம் உங்களை விட்டுப் பறந்து போய்விடும். அப்படி உணர்ந்தால் அந்த சமூக சனாதன கட்டமைப்பில் இருந்து வெளியே வந்துவிட்டோம் என்று அர்த்தம். ஜாதியை மதிக்காதே! மதத்தை மதிக்காதே! மனிதனை நினை!" என்று திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டே இருந்தார் பெரியார். ஒரு விடுதலைத் தன்மையை, ஒரு பயனை நாம் எப்படி குறிப்பிடுகிறோமோ, அப்படித்தான் இன்றைய தாழ்வு நிலையில் இருந்து கடந்து செல்வதற்கான ஒரு சொல்லாகத்தான் திராவிடம் இருக்கிறது என்று குறிப்பிட்டார் பெரியார்.

சிலர் இது தமிழ்நாடா? இல்லை திராவிட நாடா? ஒரு நாட்டிற்கு இரண்டு பெயரா? என்று கேட்பார்கள். இது தமிழ்நாடுதான் ஆனால் அது திராவிட நாடாகவும் இருக்கும். காரல் மார்ஸ், ஏங்கெல்ஸை ஏற்றுக்கொண்டவர்கள் தமிழ்நாட்டை ஒரு சோசலிச நாடு என்று கூறுவார்கள். ஹிட்லர் மாதிரியான ஆட்கள் வந்தால் தமிழ்நாடு ஒரு சர்வாதிகார நாடு என்று கூறுவார்கள். அதுபோல தமிழ்நாடு ஒரு திராவிட நாடாகவும் இருக்க முடியும். அப்படியென்றால் தமிழ்நாடு பார்ப்பனியம் ஒழிந்த நாடு. ஒருவர் தமிழனாகவும், இந்தியனாகவும் இருக்கும்போது ஏன் தமிழனாகவும் திராவிடனாகவும் இருக்க முடியாது?

**(நிறைவு)**

**தொகுப்பு : விஷ்ணு**

## வினா விடை

*1. நாங்கள் ஆட்சியில் இருந்த போது கவர்னருடன் எந்த பிரச்சனையும் இல்லை* **- எடப்பாடி**

- பாஜக ஆட்சிகளுக்கு எல்லாம் அவர்கள் பிரச்சினை கொடுப்பதில்லை.

*2. ஆளுநர் உரையில் தமிழ்த்தாய் வாழ்த்துக்கு முன் தேசியகீதம் பாட வேண்டும் என்பது பற்றி எல்லாம் எனக்கு தெரியாது. இது ஆளுநருக்கும், திமுக ஆட்சிக்கும் உள்ள பிரச்சினை* **- எடப்பாடி**

- சத்தியமாக எனக்கு தெரியாது; நான் நான்கு ஆண்டுகள் முதல்வராக இருந்த போது ஆளுநர் உரையாற்றும் போது சட்டசபையிலேயே தூங்கிவிடுவேன்.

*3. திருவேற்காடு கருமாரியம்மன் தாலியை திருடிய அர்ச்சகர்கள் கைது* **- செய்தி**

- ஆகம விதிப்படி நியமனம்; கிரிமினல் சட்டப்படி கைது!

*4. காங்கிரஸ் ஆட்சி தயாரித்த உரையை முழுமையாகப் படித்தார் கருநாடக கவர்னர் கெலாட்* **- செய்தி**

- *நாடாளுமன்றத் தேர்தலில் பாஜகவுக்கு ஓட்டுக்கள் விழ வேண்டும் என்ற கவலை அந்த கவர்னருக்கு!*

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# பாஜகவின் சவப்பெட்டிக்கு ஆணி அடிக்கிறார் ஆளுநர்!

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி மீண்டும் ஒரு நாடகத்தை சட்டப்பேரவையில் அரங்கேற்றி இருக்கிறார். அரசு எழுதிக்கொடுத்த உரையை படிக்காமல் தனது உரையை இரண்டு நிமிடத்திற்குள்ளாகவே முடித்துக் கொண்டார். அவர் எதையுமே முழுமையாக படிப்பதில்லை. அது திராவிடம் என்றாலும் சரி, வள்ளுவர் என்றாலும் சரி, சனாதனம் என்றாலும் சரி எதையும் அவர் முழுமையாக படிக்காமல் தனக்கு தெரிந்ததையெல்லாம் பேச வேண்டும் என்று நினைக்கக்கூடிய ஒருவர். அதேபோல அரசே எழுதிக்கொடுத்து சட்டப்படி படிக்க வேண்டிய ஆளுநர் அதில் எனக்கு முரண்பாடு இருக்கிறது என்று கூறி தானே ஒரு உரையை எழுதிப் படிக்க வேண்டும் என்று விரும்புகிறார் போல.

அப்படியானால் தமிழ்நாடு சட்டமன்றத் தொகுதிகளில் எதாவது ஒன்றில் போட்டியிட்டு வெற்றிபெற்று முதலமைச்சராகி, அவர் அமைக்கிற அமைச்சரவையில் ஒரு உரையை தயாரித்த பின்னர் அவர் விரும்புகிற உரையை படிக்கலாம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆட்சி, அமைச்சரவையின் வழிகாட்டுதலில் செயல்படக்கூடிய ஒரு ஆளுநர் தமிழ்நாடு அரசின் உரையில் தனக்கு முரண்பாடு இருக்கிறது என்று பதிவு செய்திருப்பது என்பது அப்பட்டமான சட்ட விரோத, அவை மரபை மீறிய ஒரு நடவடிக்கை என்றுதான் எதிர்காலம் பதிவு செய்யும்.

இதற்காக சபாநாயகர் அப்பாவு, சிறந்த பட்டம் ஒன்றை அவருக்கு வழங்கியிருக்கிறார். அதாவது கோட்சே வழியிலும், சாவர்க்கர் வழியிலும் வந்தவர் என்ற பட்டத்தை அவருக்கு கொடுத்தார். அந்த பட்டத்தோடு ஆளுநர் வெளியேறி இருப்பது என்பது தமிழ்நாடு சட்டப்பேரவையின் மாண்பை மேலும் உயர்த்தியிருக்கிறது.

சட்டமன்றம் தொடங்குவதற்கு முன்பே தேசியகீதம் பாட வேண்டும் என்கிறார். கூட்டம் தொடங்கும் போது தமிழ்த்தாய் வாழ்த்து, கூட்டம் நிறைவடையும் போது தேசியகீதம் பாடுவது தான் தமிழ்நாடு சட்டப்பேரவையின் மரபு. ஆனால் ஆளுநரோ கூட்டம் தொடங்குவதற்கு முன்பே தேசியகீதம் பாட வேண்டும் என்ற தனது அதீத தேசபக்தியை வெளிப்படுத்தி, அதை சட்டமன்றம் பின்பற்ற வேண்டும் என்கிறார். ஏற்கெனவே பின்பற்றிவரும் ஒரு மரபை மீறி ஏன் ஒரு கருத்தை திணிக்க வேண்டும்?

தமிழ்த்தாய் வாழ்த்திலும் திராவிடம் வருகிறது. தேசிய கீதத்திலும் திராவிடம் வருகிறது. இரண்டிலும் வருகிற திராவிடம் ஆளுநருக்கு ஒவ்வாமையை ஏற்படுத்துகிறது. ஆனாலும் அவர் தேசிய கீதம் பாடுவதற்கு முன்பே அவையை விட்டு வெளியேறியது அவர் தேசிய கீதத்தையும் அவமதித்திருக்கிறார் என்பதைத்தான் காட்டுகிறது. இவருடைய தேசபக்தி திமுக அரசுக்கு குடைச்சல் தருவது மட்டும்தான்.

ஆளுநர் மாளிகையை ஆர்.எஸ்.எஸ் மாளிகையாக மாற்றிக்கொண்டு அரசியல் சட்டத்திற்கு விரோதமான கருத்துக்களை பேசிக்கொண்டே தேசபக்தி நாடகம் போடுவதை தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆளுநரின் இத்தகைய செயல்பாடுகள் தமிழ்நாட்டு பாஜகவின் சவப்பெட்டியில் மேலும் ஆணியை அடித்துக்கொண்டே இருக்கிறது. இதற்காகவே ஆளுநர் ரவியை நாம் பாராட்ட வேண்டும்.

**விடுதலை இராசேந்திரன் வாட்ஸ் ஆப் பதிவு** *13.02.2024*

## இன அழிப்புக்கு துணைபோகும் அதானி?

காஸா நகரில் பாலஸ்தீனிய மக்களையும், படைகளையும் குறிவைத்து இஸ்ரேலிய படைகள் கடந்த 4 மாதங்களாக தாக்குதல் நடத்தி வருகின்றன. குறிப்பாக ஹெர்ம்ஸ் 900 வகை டிரோன்களை வைத்து இஸ்ரேலிய படைகள் நடத்திய கொடூரத் தாக்குதலில் 28,000 பேர் உயிரிழந்தனர். அதில் 10,000க்கும் மேற்பட்டவர்கள் குழந்தைகள். இனப்படுகொலைக்கு ஒப்பான இக்கொடூரச் செயலுக்கு சர்வதேச நீதிமன்றத்தில் இஸ்ரேல் வழக்கை எதிர்கொள்ளும் நெருக்கடி உருவாகியிருக்கிறது. இந்த ஹெர்ம்ஸ் 900 வகை டிரோன்களை அதானி குழுமம் தற்போது தயாரித்து அனுப்பியிருக்கிறது என்ற தகவல் வெளியாகியிருக்கிறது. 20-க்கும் மேற்பட்ட டிரோன்கள் இதுவரை அனுப்பப்பட்டுள்ளதாக, பாதுகாப்பு உபகரணங்கள் சார்ந்த பிரபல ஊடகமான ஷெப்பர்டு மீடியா கூறியுள்ளது. இஸ்ரேலின் எல்பிட் சிஸ்டம்ஸ் நிறுவனத்துடன் இணைந்து, 2018ஆம் ஆண்டு ஹைதராபாத்தில் 15 மில்லியன் டாலர் முதலீட்டில் அதானி குழுமம் பாதுகாப்பு உபகரணங்கள் தயாரிப்பு ஆலையை நிறுவியது. அந்த ஆலையில் இருந்துதான் இந்த டிரோன்கள் தயாரித்து அனுப்பப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. அதானி குழுமத்திற்கு எதிராக ஹிண்டன்பர்க் அறிக்கை வெளியானபோது அமைதிகாத்தது போலவே, இப்போதும் அமைதிகாக்கிறது மோடி அரசு. வணிக நோக்கித்திற்காக இன அழிப்புக்கு உதவும் டிரோன்களை தயாரித்து அனுப்பும் அதானி குழுமத்தின் நடவடிக்கையை தடுக்காமல், ஒன்றிய அரசு வேடிக்கை பார்ப்பதும் இன அழிப்புக்கு துணைபோகும் செயலே என கண்டனங்கள் எழுந்திருக்கின்றன.

## சேலம் மாவட்டக் கழகம் சார்பில் 525 சந்தாக்களை ஒப்படைப்பு

சேலம் கிழக்கு - மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் 10.02.2024 அன்று சேலம் கருப்பூர் சக்தி இல்லத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் 2024 ஆம் ஆண்டு பெரியார் முழக்க சந்தா தொகை ஒப்படைப்பு மற்றும் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தல் பரப்புரையாக "சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம் ;சமூக ஒற்றுமையைக் காப்போம்" என்ற தலைப்பில் தெரு முனைக் கூட்டங்கள் நடத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது. 11.02.2024 ஞாயிறு அன்று நங்கவள்ளியில் பொதுக் கூட்டத்துடன் பரப்புரையை தொடங்கி, சேலம் மாவட்டம் முழுவதும் தொடர்ந்து நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

2024-ம் ஆண்டு பெரியார் முழக்க சந்தா முதல் தவணையாக சேலம் மாவட்டத்தின் சார்பாக (கிழக்கு - மேற்கு) 525 சந்தாவிற்கு தொகையினை கழகத் தலைவரின் முன்னிலையில் தோழர்கள் ஒப்படைத்தனர். வருகின்ற 18.2. 2024 ஞாயிற்றுகிழமை எஞ்சிய பெரியார் முழக்க சந்தாக்களையும் மாவட்ட தலைமையிடம் ஒப்படைக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சேலம் மாவட்டத்திற்கான பிரச்சார வாகனம் வாங்குவது தொடர்பாக கழகத் தலைவரிடம் விளக்கம் அளிக்கப்பட்டு, அதற்கான ஏற்பாடுகளை மாவட்ட கழக தோழர்கள் முன்னெடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

கலந்துரையாடல் கூட்டத்தில் ஏற்காடு, ஆத்தூர், சேலம், இளம்பிள்ளை, நங்கவள்ளி, சிந்தாமணியூர், மேட்டூர், மேட்டூர் Rs, கொளத்தூர், காவலாண்டியூர், தார்காடு ஆகிய பகுதிகளில் இருந்து பொறுப்பாளர்களும், தோழர்களும் கலந்து கொண்டனர். நிறைவாக ஏற்காடு தேவா அவர்கள் நன்றியுரையுடன் கலந்துரையாடல் கூட்டம் நிறைவடைந்தது. தோழர்கள் அனைவருக்கும் அசைவ உணவினை கருப்பூர் சக்தி சிறப்பாக செய்திருந்தார்.

## திருச்சியில் தெருமுனைக் கூட்டங்கள்

திருச்சி : திருச்சி மாவட்டக் கழக சார்பில் வைக்கம் நூற்றாண்டு மற்றும் எது திராவிடம்? எது சனாதனம்? என்ற தலைப்பில் 3.2.2024 அன்று திருவெறும்பூர் பேருந்து நிலையம், காட்டூர் கைலாஷ் நகர், காட்டூர் கடைவீதி உள்ளிட்ட இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி தலைமை தாங்கினார். கூட்டத்தை குணராஜ் தொடங்கி வைத்தார். டார்வின் வரவேற்புரையாற்றினார். தொடர்ந்து பெரம்பலூர் மாவட்டத் தலைவர் தாமோதரன், மந்திரமில்லை! தந்திரமே! பகுத்தறிவுக் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. திருப்பூர் மாவட்ட அமைப்பாளர் சங்கீதா கருத்துரையாற்றினார். நிறைவாக குமரேசன் நன்றி கூறினார். நிகழ்வில் மணிகண்டன், சர்மிளா, ஜெய சீனிவாசன், அசோக், ஆறுமுகம், மனோகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**முதல் பக்க தொடர்ச்சி**

சிறப்புரையாற்றினர். கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, திருப்பூர் மகிழவன் ஆகியோரும் பரப்புரையின் நோக்கம் குறித்து மக்களிடம் விளக்கிப் பேசினர்.

பழைய ஆயக்குடி, புது ஆயக்குடி, ஒபுளாபுரம், பாலசமுத்திரம், அழகாபுரி உள்ளிட்ட பகுதிகளிலும் பரப்புரைக் கூட்டங்கள் நடைபெற்றன. தேனி ராயன், சங்கர், திண்டுக்கல் மாவட்ட அமைப்பாளர் தோழர் மருதமூர்த்தி, உஷாராணி, ஆயுதன் ஆகியோர் கருத்துரையாற்றினர். நிறைவாக அழகாபுரியில் நடைபெற்ற கூட்டத்தில் அ.கலையம்புத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் வந்தனா முரளி கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

**ஈரோடு தெற்கு :** *11.2.2024* அன்று நசியனூரில் காலை *10* மணியளவில் பரப்புரைக் கூட்டம் தொடங்கியது. கூட்டத்தில் அமைப்புச் செயலாளர் ஈரோடு ரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி, ஆதித்தமிழர் பேரவை வீரவேந்தன் ஆகியோர் மோடி அரசின் மக்கள் விரோதத் திட்டங்களை பட்டியலிட்டு இந்தியா கூட்டணி ஏன் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதை விளக்கிப் பேசினார்கள். தொடர்ந்து வில்லரசம்பட்டி நால்ரோடு, திண்டல், காரப்பாளையம் உள்ளிட்டப் பகுதியில் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது. கிருஷ்ணமூர்த்தி, எழில், செல்வராஜ், செந்தில், திருமுருகன், விக்னேஷ், வல்லரசு, பழனிச்சாமி, பிரபு, கோபிநாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்னை : 12.02.2024 அன்று திருவல்லிக்கேணி வி.ஆர்.பிள்ளை தெரு, சேப்பாக்கம் சி.என்.கே சாலை உள்ளிட்ட இரண்டு இடங்களில் நடைபெற்றது. உமாபதி - பொன்ராஜ் குழுவின் கலை நிகழ்ச்சிகளுடன் கூட்டம் தொடங்கியது. கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார், ஊடகவியலாளர் மாதூர் சத்யா ஆகியோர் மோடி ஆட்சியின் மக்கள் விரோத திட்டங்களை அம்பலப்படுத்தி, இந்தியா கூட்டணி ஏன் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதை விளக்கிப் பேசினார்கள். பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தை ஆர்வத்துடன் கவனித்து, பரப்புரை இயக்கத்தின் நோக்கம் வென்றிட தங்களது பங்களிப்பை வழங்கினர். ரூ.1500/- திரட்டப்பட்டது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : February 16, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran